**12 PM, இலங்கை, 13 அக்டோபர் 2020 வரை வெளியீடு தடைசெய்யப்பட்டது, ஆபத்தில் உள்ள பெண் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு, பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ் விருது வழங்கப்பட்டது.**

நான்கு பெண் மனித உரிமை பாதுகாவலர்களும் ஒரு பழங்குடி சமூகமும், 2020 ஆபத்தில் உள்ள மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ் விருதை வென்றுள்ளனர். பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவது, சமாதானத்தை கட்டியெழுப்பும் இயக்கங்களை வழிநடத்துவது, சிறுபான்மை குழுக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் பூர்வீக நிலங்களைப் பாதுகாப்பது போன்ற உயிருக்கு ஆபத்தான பணிகளிற்காக இந்த அமைப்பு இப் பாதுகாவலர்களை கௌரவிக்கிறது.

உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மனித உரிமை பாதுகாவலர்களை அடக்குவதற்கும் தாக்குவதற்கும் தொற்றுநோய் காலத்தைப் பயன்படுத்துகின்றன. விமர்சனக் குரல்களை குறிவைக்க அதிகாரிகளின் படைகள், மனிதநடமாட்டம், அணிதிரட்டல் மற்றும் கருத்து சுதந்திரம் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துகின்றன.

COVID-19 இன் போது ஏற்கனவே மிகவும் ஆபத்தில் உள்ள ஒதுக்கப்பட்ட மற்றும் களங்கப்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மனித உரிமைகள் பாதுகாவலர்கள், தங்கள் அயலவர்களை தொற்றுநோயிலிருந்து பிழைத்துகொள்ள உதவுவதற்காக உடல் ரீதியான தாக்குதல்கள், கைது மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

விருது பரிந்துரைகளை மறுஆய்வு செய்யக்கூடிய ஐயர்லாந்தைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாலான நடுவர் மன்றம், அவர்கள் தேர்ந்தெடுத்த ஐந்து பிராந்திய வெற்றியாளர்களின் தைரியம் மற்றும் உறுதியால் பெரிதும் நகர்த்தப்பட்டனர்.

**ஆபிரிக்கா: மெக்கபொலா மின்ர் பிரஹிம், (மவுரித்தேனியா)**

**அமெரிக்கா: கார்டியா இண்டிகனா டி காகா (கொலம்பியா)**

**ஆசிய பசிபிக்: ஜுவைரியா மொஹிதீன் (இலங்கை)**

**ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா: லாரா அஹரோனியன் (ஆர்மீனியா)**

**மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா: பாத்திமா அல்-பஹத்லி (ஈராக்)**

2005 முதல், பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ் அதன் விருது வழங்கும் விழாவை டப்ளினின் சிட்டி ஹாலில் நடத்திவந்திருக்கின்றனர். இந்த ஆண்டு, COVID-19 கட்டுப்பாடுகள் காரணமாக, ஒரு மெய்நிகர் விருது வழங்கும் விழா, சர்வதேச மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தினமான டிசம்பர் 9 அன்று இடம்பெறும். **அகில உலக பரிசு பெற்றவர் மற்றும் ஒட்டுமொத்த விருது வென்றவர் விபரம், டிசம்பர் 9 அன்று அறிவிக்கப்படும்.**

பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ்; நிர்வாக இயக்குநர் ஆண்ட்ரூ ஆண்டர்சன் தெரிவிக்கையில், “ஊழல் நிறைந்த, திறமையற்ற மற்றும் அடக்குமுறை அரசாங்கங்கள் நெருக்கடிக்கு பதிலளிப்பதில் தோல்வியுற்றதை கோவிட் -19 தொற்றுநோய் வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கின்றது. இந்த விருது பெறுபவர்கள் தங்கள் நாடுகளில் மிகவும் ஒதுக்கப்பட்ட சில சமூகங்களை பாதுகாக்கின்றனர். இவர்கள் தொடர்ந்து அவர்களது சமூகங்களின் பிரதிநிதிகளாக முன்வருகின்ற தருணங்களில் புலப்படும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கெதிராக அரசாங்கங்கள் தாக்குதல்களை இரட்டிப்பாக்குகின்றன.” "இன்று நாம் கௌரவிக்கும் மனித உரிமை பாதுகாவலர்களின் தைரியமும் நேர்மையும், எவ்வாறு நாங்கள் நேர்மறையான மாற்றத்தை அடைய ஒன்றிணைந்து செயல்பட முடியும் என்பதற்க்கான உத்வேகமாக, பிரகாசமாய் ஒழிர்கின்றது. ”

ஜுவைரியா மொஹிதீன் இலங்கையின் வடமேற்கில் உள்ள புத்தளத்தை மையமாகக் கொண்ட ஒரு இலங்கை முஸ்லீம் பெண் மனித உரிமை பாதுகாவலர் ஆவார். 1990 ஐப்பசியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் வலுக்கட்டாயமாக உள்நாட்டுக்குள் இடம்பெயர்த்தப்பட்ட வடக்கு முஸ்லீம் சமூகத்தில் இவரும் ஒருவராவார். மற்றும் புத்தளம் மாவட்டத்தில் உள்ள முஸ்லீம் பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளையின் நிறுவனர் / நிர்வாக இயக்குனராகவும் உள்ளார் . 25 ஆண்டுகளுக்கும் மேலான பணியில், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான பரிந்துரைப்பு செயற்பாடுகளில் ஜுவைரியா ஈடுபட்டுள்ளார். துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் பாகுபாட்டை எதிர்கொள்ளும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு MWDT தினசரி நடைமுறை ஆதரவு, ஆறுதல், ஆலோசனை மற்றும் சட்ட உதவிகளை வழங்குகிறது. முஸ்லீம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் முஸ்லீம் தனிப்பட்ட சட்டங்களில் சீர்திருத்தத்திற்கான முனைவுகளில் ஜுவேரியாவும் முன் வரிசையில் உள்ளார். இவர் சீர்திருத்தத்திற்கான அடிமட்ட அடிப்படையிலான ஆதரவை திரட்டுவதுடன், உள்ளூர் பெண்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முடிவெடுப்பவர்களுடன் தொடர்பாடல் இடையீடல்களை செய்யவும் வழிகாட்டுகிறார். அவரது பணி காரணமாக அவர் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக அச்சுறுத்தல்களை சந்தித்துள்ளார், தனது சொந்த சமூகத்தினரால் துரோகி என்று முத்திரை குத்தப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்டார். இவர் சமூகங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான சமாதனத்துக்காக பணியாற்றுவதுடன் தனது சமூகத்தில் இளைய தலைமுறை பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாக சேவை செய்கிறார்.

"பழமைவாத மத சக்திகளுக்கு எதிரான பெண்களின் உரிமைகளை முன்னேற்றுவதற்கும், ஓதுக்கப்பட்ட குழுக்களின் வாழ்க்கை மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் பொறுப்பு கூறலை நாடுவதற்கும் ஜுவேரியா மொஹிதீன் செயல்படுகிறார். மேலும் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலின் கீழ் அவர் வரவேற்கத்தக்க புன்னகையுடன் அவ்வாறு செய்துவருகிறார். அவரது சொந்த வலியிலும், இளமை பருவத்தின் இடம்பெயர்வு அதிர்ச்சியிலும், அவர் ஒரு உறுதியான நீதியின் சாம்பியனாக நம்பமுடியாத நற்பெயரை உருவாக்கியுள்ளார். அவர் இலங்கையர் அனைவருக்கும் ஒரு முன்மாதிரி, " என்று திரு ஆண்டர்சன் குறிப்பிட்டார்.

பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ் அதன் ஆண்டு விருதை 2005 இல் ஸ்தாபித்தனர். 2018 ஆம் ஆண்டில், இந்த அமைப்பு ஒரு பிராந்திய வெற்றியாளர் மற்றும் அகில உலக பரிசு பெற்றவர்களுடன் உலகெங்கிலும் இருந்து ஐந்து வெற்றியாளர்களை அங்கீகரிக்கத் தொடங்கியது.[1] 2020 பிராண்ட் லைன் டிபெண்டெர்ஸ் விருதுக்கான ஜுரியானது, செனட்டர்- இவானா பேசிக் (தொழிலாளர்); சீன் க்ரோவ் டி.டி (சின் ஃபைன்); கோர்மக் டெவ்லின் டி.டி (ஃபியானா ஃபெய்ல்); கேரி கேனன் டி.டி (சமூக ஜனநாயகவாதிகள்); மற்றும் ஜெனிபர் கரோல் மேக்நீல் டி.டி. (ஃபைன் கெயில்) ஆகியோரை கொண்டு உருவாக்கப்பட்டது.

ஜுவேரியாவுடன் பின்தொடர்தல் நேர்காணல்களை ஏற்பாடு செய்யலாம்.

**ஊடக தொடர்புகள்:**

**கிரேஸ் பாரெட்**

gbarrett@frontlineefenders.org
+353 87 174 3228

**ஆடம் ஷாபிரோ**

+ 1-202-294-8813
adam@frontlineefenders.org

1ஐந்து பகுதிகளாவன: ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆசியா-பசிபிக், ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா.